بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *14/05/2021* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்குள் எரிந்து கொண்டிருக்கும், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதுள்ள அன்பு எனும் தீப்பிழம்பு, இவர்களின் இலட்சக்கணக்கான மக்களுக்குள்ளும் கூட எரியவில்லை என்பது இந்த மக்களுக்குத் தெரிந்து விட்டால், பிறகு அவர்கள் உடனடியாக அஹ்மதிகளாகிய உங்கள் பாதங்களில் விழுந்து விடுவார்கள். நினைவிற் கொள்ளுங்கள்! இந்த எதிர்ப்பவர்கள் உங்களின் சகோதரர்கள். மேலும், தவறான புரிதலில் மூழ்கியுள்ளார்கள். நீங்கள் கோபப்படுவதற்குப் பதிலாக இவர்களுக்காக துஆக்கள் செய்யுங்கள்.**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

கடந்த நாட்களில், ஒரு மௌலவி சாஹிப் சமூக ஊடகத்தில் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தார்:

'பாலஸ்த்தீனத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் குழப்பம் உட்பட உலகில் எங்கு குழப்பமும் சண்டையும் ஏற்பட்டாலும் சரி! அதற்குக் காரணம் காதியானிகள் தான். ஆகவே, அவர்களை அடிப்பது, கொல்வது, எல்லாமே ஆகுமானது தான்.'

அஹ்மதிய்யத் துவங்கியதிலிருந்து இதுநாள் வரை இந்த நிராகரிப்பாளர்களின் தலைவர்களின் இந்த வழிமுறையே இருந்து வருகிறது. ஆனால், இறைவனுக்கு மிக மிக நன்றி! நாம் எத்தகைய மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால், அன்னார் நமக்கு, இந்த அனைத்து அநீதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பொழுதிலும் பொறுமையுடனும் துஆவுடனும் செயல்படுமாறு போதித்துள்ளார்கள்.

நான் இது தொடர்பாக பெருநாள் குத்பாவிலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளைச் சான்றாகக்

கொண்டு கூறியிருந்தேன். அன்னார் கூறுகிறார்கள்: ‘எதிரிக்காகவும் துஆ செய்யுங்கள்.’

இந்த எதிர்ப்போ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இருந்து வருகிறது. அன்னார் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அன்னார் கூறுபவற்றை செவிமடுப்பதை விட்டும் கூட்டங்களுக்கு வருவதை விட்டும் மக்களைத் தடுக்கப்பட்டது.

ஆனால், இவையனைத்தும் இருந்தும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த அநீதியிழைத்தவர்களுக்காக துஆ செய்தார்கள். இந்த துஆக்களின் விளைவாகவே, அவர்களிலிருந்து சில எதிரிகள் அன்னாரின் உண்மைத்துவத்தை ஏற்றுக் கொண்டு ஜமாஅத்தில் இணைந்தும் விட்டார்கள். மேலும், இப்போது வரை இணைந்து கொண்டே இருக்கிறார்கள்.

ஆக, பாமர முஸ்லிம்களுக்காக, நாம் அவர்களின் கடுஞ்சொற்களை செவியுற்ற பிறகும் துஆ செய்கிறோம். அவர்களின் வேதனைகளின் பொழுது நமக்கு வேதனை ஏற்படுகிறது. ஏனெனில் இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கிய போதனையாகும். அல்லாஹ்வும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இதையே கூறினான்:

இவர்களின் இந்த அநீதிகள் தவறான புரிதல் ஆகியவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பின் காரணமாக உள்ளன. எனவே இவர்களுக்காக தண்டனைக்கான துஆ செய்யக்கூடாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் அச்சமயம் சிறுபிள்ளையாக இருந்தேன். லாஹூரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு வாதத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். வழியில் மக்கள் ஏசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு வயதான முடவர் தனது ஆரோக்கியமான கையை மற்ற வெட்டுப்பட்ட கைமீது அடித்துக் கொண்டே பஞ்சாபி மொழியில் ‘மிர்ஸா நட்(ஹ்) கயா. அதாவது, மிர்ஸா ஓடிவிட்டார்’ என்று கூறிக் கொண்டிருந்தார்.

இவ்வாறே லாஹூர் நகரத்திலேயே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தாக்குதலும் தொடுக்கப்பட்டது; கல்லும் எறியப்பட்டது.

பொது மக்களின் இந்த பகைமை மற்றும் எதிர்ப்புக்குப் பின்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனான உள்ளத் தொடர்பும் அன்பின் உணர்வுமே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

எனக்குள் எரிந்து கொண்டிருக்கும், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு எனும் தீப்பிழம்பு, இவர்களின் இலட்சக்கணக்கான மக்களுக்குள்ளும் கூட எரியவில்லை

என்பது இந்த மக்களுக்குத் தெரிந்து விட்டால், பிறகு அவர்கள் உடனடியாக அஹ்மதிகளாகிய உங்கள் பாதங்களில் விழுந்து விடுவார்கள்.

நினைவிற் கொள்ளுங்கள்! இந்த எதிர்ப்பவர்கள் உங்களின் சகோதரர்கள். மேலும், தவறான புரிதலில் மூழ்கியுள்ளார்கள். நீங்கள் கோபப்படுவதற்குப் பதிலாக இவர்களுக்காக துஆக்கள் செய்யுங்கள்.

ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வீட்டின் கீழ்த்தளத்தில் வசித்து வந்தார்கள். நான் மேல்தளத்தில் வசித்து வந்தேன். ஒருநாள் இரவு, ஒரு பெண் பிரசவ வலியின் காரணமாக கதறுவதைப் போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அழும் குரல் கேட்டது. நான் காது கொடுத்து கேட்ட போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்:

இறைவா! பிளேக் நோய் பரவியுள்ளது. மக்கள் அதன் காரணமாக மரணித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் அனைவரும் மரணித்து விட்டார்கள் என்றால், பிறகு யார் உன் மீது ஈமான் கொள்வார்கள்?'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பாருங்கள்! பிளேக் நோய் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை நிரூபிக்கும் வகையில் வெளிப்பட்டது. ஆனால் பிறகும் கூட அன்னார் இறைவனுக்கு முன்னால் அழுது அழுது மன்றாடி மக்களுக்காக துஆ செய்கிறார்கள்.

எனவே நம்பிக்கை கொண்டவர்கள் பொது மக்களுக்காக தண்டனைக்காக துஆ செய்யக்கூடாது. இறைவனுக்கோ உங்களை விட அதிகம் தன்மானம் இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் இல்ஹாமாக இவ்வாறு கூறினான்:

اے دل تو نیز خاطرے ایناں نگاہ دار     کاخر کنند دعوئ حب پیمبرم

ஏ திலே தூ நேஸ் காத்திரே ஈனா(ன்) நிகாஹ்தார்
கெ ஆகிர் குனந்து தாவயே ஹுப்பே பயம்பரம்

இந்தக் கவிதையில் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தைப் பார்த்து அன்னாரின் நாவினால் இவ்வாறு கூறவைக்கிறான்:

'எனது உள்ளமே! நீ அந்த மக்களின் உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளைக் கருத்திற்கொண்டிரு. இவ்வாறு அவர்களின் உள்ளம் அசுத்தமடையாமல் இருக்கட்டும். நீ தளர்ந்து போய் தண்டனைக்கான துஆ செய்ய ஆரம்பித்து விடாதே! முடிவில், அவர்களுக்கு உனது தூதர் மீது அன்பு இருக்கிறது. அதன் காரணமாகவே அவர்கள் உன்னை ஏசுகிறார்கள்.'

இது தான் அசல் விஷயம். நமது எதிரிகளில் ஒருபகுதி தேவையில்லாமல் எதிர்த்துக் கொண்டிருகின்றது என்பதை நாம் அறிவோம்.

ஆனால் பாக்கிஸ்தான் மற்றும் உலகின் இதர நாடுகளிலும் கூட ஒருபகுதி வெறுமனே அவர்களின் வலையில் விழுந்து விட்டது. அவர்களின் இந்த எதிர்ப்பு நமது எஜமானர் (ஸல்) அவர்கள் மீதான அன்பின் காரணமாக உள்ளது.

நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கக்கூடியவர்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்து விடும் போது அவர்கள், 'இவர்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று கூறுவார்கள். இந்த நாள் கண்டிப்பாக வரும். மேலும், இந்த எதிர்ப்பு ஒரு நாள் முடிவடைந்து விடும். இன் ஷா அல்லாஹ்.

மேலும், இந்த மௌலவிகள் நமக்கு எதிராக அறிக்கை விடுகிறார்கள் என்றால், இவர்கள் நமக்குப் பலனளிக்கக்கூடிய வேலையை செய்கின்றனர். ஏனெனில், எத்தகைய மட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நம் மூலமாக தூதுச் செய்தியை எட்டவைப்பது சிரமமாக இருந்ததோ, அங்கெல்லாம் இந்த எதிரி மௌலவிகள் மூலமாக பணி நடைபெறுகிறது.

நாம் பொறுமைகாத்து துஆவோடு செயல்பட்டவாறு நமது சிந்தனைகளையும் உணர்வுகளையும் தூய்மையாக வைத்திருப்பதே நமது பணியாகும். இவர்களுக்காக துஆ செய்து கொண்டேயிருங்கள்.

அல்லாஹ் விரைவில் இவர்களின் கண்களைத் திறப்பானாக! இவர்கள் காலத்தின் இமாமை அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாக ஆகி விடுவார்களாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ

يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ۔

عِبَادَ اللّٰهِ رحمکم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ

لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னி)